Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி -14 | 01-10-2003 | புதன்கிழமை | ஓசை 225

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்.
பாடல் பதிவுகள்.
அனைத்திற்கும்

Jaffna Road,
Kilinochchi.

யாழ் சாலை,
(கி-8628) கிளிநொச்சி.

-புலிகளின் மகளிர் அணிகளுக்கிடையிலான-

## விளையாட்டுப் போட்டி நிகழ்வில் தேசியத் தலைவர் கலந்து சிறப்பிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் அணிகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகளில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். இந் நிகழ்வு நேற்று வன்னியில் சிறப்பாக இடம்பெற்றது.

முதற்பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் 16ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டும், தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டும், தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்றுப் பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றுள்ளன. இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழீழ தேசியக்கொடியினை மூத்த தளபதி கேணல் கருணா அவர்கள் ஏற்றி வைத்தார். போட்டிகளின் நிறைவில் சோதியா படையணி முதலாமிடத்தையும், அன்பரசி படையணி இரண்டாமிடத்தையும், மாலதி படையணி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

## இல. சமாதான நடவடிக்கையில் அமெரிக்கா விசேட கவனம்

-புதிய அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க அரசாங்கம் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் விசேட கவனமெடுத்துள்ளதாகவும் இலங்கையில் நிரந்தர சமாதானம் ஒன்று ஏற்படும் போது அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கான நிதியுதவிகளை அதிகரிக்கும் அதே சமயம் முதலீட்டு வாய்ப்புக்களையும் அதிகரிக்கவுள்ளதாக அமெரிக்காவின் சிறிலங்காவிற்கான புதிய தூதுவர் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சிறிலங்காவிற்கான புதிய தூதுவரான கெவ்றி ஜே.லங்ஸ்ரீட் நேற்று அமைச்சர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஒன்று ஏற்படுவதற்கு அமெரிக்க அரசாங்கம் முழு ஒத்துழைப்பை வழங்கும் என்று லங்ஸ்ரீட் தெரிவித்த போது அமைச்சர் ரவூப் ஹக்

(8ஆம் பக்கம் பார்க்க)

# அரசைக்கவிழ்க்கும் நடவடிக்கையாக இம்மாதம் கொழும்புவரும் வழிகளை மறித்துப் போராட்டம்

## சுதந்திரக்கட்சி மாநாட்டில் தீர்மானம்

(கொழும்பு)

**சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக பெரியளவான பேரணிகளையும், கூட்டங்களையும் நடத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்டக் குழுக்கூட்டத்தில் தீர்மானமெடுக்கப்பட்டுள்ளது.இச்சந்திப்பில் ஒக்டோபர் மாதத்தில் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்குடன் கொழும்பிற்கு வரும் பிரதான வீதிகளை மறித்துப் பாரிய பேரணிகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

நேற்று சனாதிபதி சுதந்திரக் கட்சியின் உயர்மட்டக் குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடியதாகத் தெரிய வருகிறது.

மேலும் சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் இப்பேரணிக்காக முக்கியமானவர்களுக்கிடையே பொறுப்புக்கள் பங்கிடப்பட்டுள்ளதாகவும், இவர்கள் இப்பேரணிக்கு என்னென்ன சேவைகளைச் செய்ய வேண்டும் என்று சனாதிபதி அறிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இப்பேரணிக்காக ஜே.வி.பி.யினரின் ஆதரவைப் பெறுமாறும், நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்களை ஒன்று திரட்டி தமது அரசியல் பலத்தைக் காட்ட வேண்டுமெனவும் சனாதிபதி அறிவித்துள்ளதாகவும்தெரியவருகிறது. (32)

-உரிய தீர்வு கிடைக்காவிடின்-

## சந்திப்பிலிருந்து வெளியேற மீனவர் சங்கங்கள் முடிவு

வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதிகளில் உள்ள மீன்பிடி இறங்குதுறைகளை ஆழப்படுத்துவதற்கான அனுமதி தொடர்பான உரிய தீர்வை இன்றைய சந்திப்பில் படைத்தரப்பு அறிவிக்காவிடின் இன்று இடம்பெறவுள்ள அச் சந்திப்பில் இருந்தஇடையில் வெளியேறுவதென அப்பகுதி மீனவ சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

இவ் இறங்குதுறைகளை ஆழப்படுத்துவது தொடர்பான முன்னனுமதி தம்மிடம் பெறப்படாமையாலும் இப்பகுதிகள் படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பிரதேசங்கள் ஆகையாலுமே தாம் இறங்குதுறைகளை ஆழப்படுத்தும் மீனவர்களது முயற்சிகளைத் தடுத்து நிறுத்தியதாக யாழ். மாவட்ட படைத்தலைமை நேற்று அறிவித்துள்ளது.

இந்நிலையில் இவ்விடயம் தொடர்பாக வடமராட்சி வடக்குப் பிரதேச மீனவ சங்கங்களின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை-பரந்தன் வீதி விபத்தில் சிக்கிய வாகனம் பலத்த சேதம்

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் - முல்லை வீதியில் முரசுமோட்டை இரண்டாம் கட்டைப் பகுதியில் நேற்று மாலை ஏற்பட்ட வீதி விபத்தில் கெயர் நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனத்தின் முன் பகுதி பலத்த சேதமடைந்துள்ளது.



நேற்று மாலை 5.30 மணியளவில் பரந்தனில் இருந்து புதுக் குடியிருப்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த கெயர் நிறுவன வாகனத்தை பரந்தன் நோக்கி வந்து கொண்டிருந்த பார ஊர்திகள் சங்கத்திற்குச் சொந்தமான எரிபொருள் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள எரிபொருள் பௌசர் மோதியது. இதன்போது மேற்படி சொகுசு ரக

(8ஆம் பக்கம் பார்க்க)

## நெல் வாணிபஞ் செய்வோர் கவனத்திற் கொள்க

நெல் வாணிபஞ்செய்வோர் வருவாய்ப்பகுதியின் தொழிற்பதிவுச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும் என வருவாய்ப்பகுதி அறிவித்துள்ளது.

அத்துடன் நெல்லைக் கொள்வனவு செய்யும் போது கொள்வனவுச் சிட்டை வழங்குதல் வேண்டுமெனவும் ஒரு கிலோ நெல்லை பதினொரு உரூபா ஐம்பது சதத்திற்குக் (11.50) குறையாத விலையில் கொள்வனவு செய்யவேண்டும் எனவும் வருவாய்ப்பகுதி கேட்டுள்ளது.

## யாழ். மக்களின் உண்மையான பிரச்சினை வெளியுலகிற்கு கொண்டு வரப்படவில்லை

### யாழ்.பல்கலை துணைவேந்தர் மோகனதாஸ்

தற்போது குடாநாட்டில் வாழும் மக்களின் உண்மையான பிரச்சினைகள் இன்னமும் வெளியுலகிற்குக் கொண்டு வரப்பட வில்லை என யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னரும் கூட யாழ். குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்வு திரும்பவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும் விதமாக யுனெஸ்கோ நிறுவனத்தின் ஆதரவில் யாழ். ஊடகவியலாளர்களுக்கு செய்திப் படப்பிடிப்பாளர்களால் நடத்தப்பட்ட புகைப்படக் கண்காட்சியைப் பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கலைப்பீடாதிபதி கோபாலகிருஷ்ண ஐயர் மற்றும் இந்தியாவின் திருநெல்வேலிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அரிச்செல்வன், பேராசிரியர் சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் தொடர்ந்து கருத்துக்கூறிய துணைவேந்தர் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையைக் காரணமாக வைத்துக் கொண்டு யாழ். குடாநாட்டில் சுமுக நிலை தோன்றியுள்ளதாக செய்யப்படும் பொய்ப்பிரச்சாரங்களை ஊடகவியலாளர்களே வெளியுலகிற்குக் கொண்டுவர வேண்டுமெனவும் கேட்டுள்ளார். (33)

## யாழ். இல் உதவும் தொண்டு நிறுவனங்கள் சமநிலை பேணி உதவிகள் வழங்கவில்லை

- யாழ். அரச அதிபருக்கு அ.சா.நி.கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் உதவும் தொண்டு நிறுவனங்கள் சமநிலையைப் பேணும் விதத்தில் செயற்படவில்லை எனச் சுட்டிக்காட்டி யாழ். அரசாங்க அதிபர் பத்மநாதனுக்கு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் முக்கியமான கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களால் இடம்பெயர்ந்து வாழும் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாத நிலையிலுள்ளதால் உதவு மனைபுக்களிடம் கையேந்த வேண்டிய நிலையிலுள்ளது.

இதனால் இம்மக்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டு அவர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் தொண்டு நிறுவனங்கள் தங்களது உதவிகளை வழங்க வேண்டும் என்றும் அக்கடிதத்தில் மேலும் கேட்கப்பட்டுள்ளது. (33)


மீண்டெழும் கிளிநகரில் புதுப்பொலிவுடனும்
உயர்தொழில்நுட்பத்துடனும்
உங்கள் நாவின் சுவைத்தேடலுக்கு விருந்து படைத்திட
மீண்டும் !
பாண்டியன் சுவையூற்று
01.10.2003
இன்று முதல்
பாண்டியன் வாணிபம்
சுவையூற்று
Pandiyan Vanybam
Suvaiyutru
குறைந்தசெலவில் நிறைந்தபயன்
விரும்பிப்பணிசெய்யும் பணியாளர்
விரைவான பணி
தென்றல் வீசும் அமைவிடம்
பயணிகள் தேவையை
நிறைவுசெய்யும் சிறப்புப்பண்புகள்
தூய்மை பேணுவதில் முதன்மை
நாவில் உணவுவகைகளையும், நாவூறும் சிற்றுண்டிகளையும்
நினைத்தவுடன் உண்டு, நிறைவடையும் இடம் இதுவே!!
உங்கள் தேவையை நிறைவு செய்யும் எம் பணிகள்
அகத்தினுள்ளே..
உள்நாட்டு
வெளிநாட்டுஉணவுகள்
சிற்றுண்டிகள்
குளிர்களிகள்
குளிர்பருகைகள்
இனிப்பு வகைகள்
இன்னும் பலவகை
சிறப்பு உணவுகள்
அகத்தின் வெளிப்பணிகள்..
முன்பதிவுகளுக்கான
காலை, பகல்,
இரவு உணவுகள்
குளிர்களிகள்மற்றும்
இனிப்பு வகைகள்
யாவும் கேட்குமிடத்தில்
வழங்கப்படும்.
SM Graphics
பாண்டியன் சுவையூற்று
டிப்போச்சந்தி அருகாமை, யாழ்சாலை, கிளிநொச்சி.

# அணுவாயுதங்களை வைத்துள்ள இஸ்ரேலை மேற்குலக நாடுகள் ஏன் கண்டிப்பதில்லை?

## -சவூதி அரேபிய வெளியுறவு அமைச்சர் கேள்வி

**அணுவாயுத பரவல் தடைச்சட்டத்தில் கைச்சாத்திடாமல் இருக்கும் இஸ்ரேல்மீது மேற்குலகம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? என அரபு நாடுகள் கேள்வியெழுப்பியுள்ளன.**

சந்தேகத்திற்கிடமான அணுவாயுதத் திட்டங்களை கைவிடுமாறு அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் வடகொரியாவையும் ஈரானையும் வற்புறுத்தி வருகின்றன.

அணுவாயுத பரவல் தடைச் சட்டத்தில் இஸ்ரேல் கைச்சாத்திடாமல் இருக்கிறது. இதனை மேற்குலகம் அனுமதிப்பதோடு கண்டுகொள்ளாமலும் இருக்கின்றது. சவுதி அரேபிய வெளி விவகார அமைச்சர் இளவரசர் சவுத் அல்பைசால் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்த கூட்டத்தில் உரையாற்றும் பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இஸ்ரேல் அணுவாயுதங்களை வைத்திருப்பதாக பரவலாக பேசப்படுகின்றது. ஆனால் அணுவாயுத பயன்பாடு தொடர்பான எந்தவொரு முக்கிய உடன்படிக்கையிலும் கைச்சாத்திடவில்லை. என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.



ஈராக் மீது அமெரிக்க தாக்குதல் நடத்துவதை எதிர்த்து சான்பிரான்ஸிஸ்கோ நகரில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் முகமூடியுடன் காணப்படும் ஆர்ப்பாட்டக்காரர்



காசாவையும் மேற்குக்கரை நகரத்தையும் இஸ்ரேல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த 3ஆம் ஆண்டு நினைவாக நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பெண்கள் எதிர்ப்புக் கோஷம் எழுப்புகிறனர்.

# ஈரான் மீது பொருளாதாரத் தடை ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை

ஈரான் அதன் அணுவாயுத திட்டம் தொடர்பில் சர்வதேச நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்பாது விட்டால் அதற்கு எதிராக பொருளாதார நெருக்குதல்களை விதிக்கப்போவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஈரான் அதன் அணுவாயுத திட்டம், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை, மனிதவுரிமைகள், மத்தியகிழக்கு சமாதான முயற்சி ஆகிய சர்வதேச அக்கறைமிகு விடயங்களில் சாதகமான போக்கை காண்பிக்காவிட்டால் மிகப் பெறுமதிமிக்க வர்த்தக உடன்படிக்கையை கவிழ்க்கும் சாத்தியம் ஏற்படலாமென ஐரோப்பிய ஒன்றிய வெளிநாட்டமைச்சர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நான்கு விவகாரங்களிலும் முன்னேற்றம் காணப்பட்டால் மட்டுமே மிகவும் தீவிரமான பொருளாதார உறவுகளை மேற்கொள்ளமுடியுமென பிறஸ்சல்ஸில் நடைபெற்ற கூட்டத்தின் போது விடுக்கப்பட்ட அறிக்கையில் அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எமது சனநாயக நகர்வை சர்வதேசம் வரவேற்கவில்லை

## -மியன்மார் இராணுவ ஆட்சியாளர்

மியன்மார் அரசாங்கம் ஜனநாயகத்தை நோக்கி அடிகளை எடுத்து வைத்தாலும் சர்வதேச சமூகம் அதனை அங்கீகரித்து வரவேற்கவில்லையென இராணுவ ஆட்சியாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஐ.நா.பொதுச்சபையில் வருடாந்த கூட்டத்தில் உரையாற்றிய மியன்மாரின் வெளிவிவகார அமைச்சர் இக் குற்றச்சாட்டை கூறியுள்ளார். ஆனால் வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு வீட்டுக் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எதிர்க்கட்சி தலைவி சூகி பற்றி அவர் எதனையும் கூறவில்லை.

# ஜோஷி மீதான குற்றச்சாட்டு பதிவிற்கு நீதிமன்று தடை!

(புதுடில்லி)

அமைச்சர் முரளி மனோகர் மீது குற்றச்சாட்டு பதிவுசெய்யுமாறு றெபரேலி நீதி மன்றம் அளித்த தீர்ப்பிற்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளது.


இதனைத் தொடர்ந்து அவர் தனது பதவிவிலகலை மீளப்பெற்றார்.

பிரதமர் வாஜ்பாயை நேற்று முன்தினம் சந்தித்து விவாதித்த பின்னர் அயோத்தி வழக்கில் றெபரேலி நீதிமன்றம் தம்மீது குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யவுள்ளமைக்கு தடை விதிக்கக் கோரி மத்தியமனிதவள அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி மேன்முறையீடு செய்திருந்தார்.

தன் மீதான குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்படுவது தடை செய்யப்படுவதுடன், இடைநிறுத்தியும் வைக்கப்பட வேண்டுமென்று அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் லக்னோ பிரிவில் மேன்முறையீடு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 15பேர் சுட்டுக்கொலை

காஷ்மீர் மாநில குறேஸ் பிரிவில் கல்சால்வான் பகுதியில் 15 வெளிநாட்டு கூலிப்படையினரை இராணுவம் சுட்டுக் கொன்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அப்பாலிருந்து குண்டுத்தாக்குதலை மேற்கொண்டு இவர்கள் ஊடுருவிய போதே இவர்களை இராணுவம் சுட்டுள்ளதாகத் தெரியவருகிறது.



கோலாலம் பூருக்கு அருகிலுள்ள ''புத்ரஜயா'' நகரில் மலேசிய பிரதமரின் அலுவலக கட்டடத்துக்கு மேலாக சாகசத்தில் ஈடுபடும் பிரித்தானிய விமானப்படை விமானங்கள் (இங்கு இச்சம்பவம் நடைபெறுவது இதுவே முதல் தடவை)

# சர்ச்சைக்குரிய இடத்தில் இராமர் கோவில்; மக்களவை தேர்தலில் பா.ஜ.க வியூகம்

(புதுடில்லி)

நிர்வரும் மக்களவை தேர்தலில் சர்ச்சைக்குரிய அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவதை வலியுறுத்தி பாரதீய ஜனதா கட்சி பிரச்சாரம் மேற்கொள்ளவுள்ளதாக கூறியுள்ளது.

இதனை பாரதீய ஜனதாவின் பொதுச்செயலர் பிரமோத் மகாஜன் கூறியுள்ளார். நேற்று முன் தினம் தேராடோரில் பாரதீய ஜனதா கட்சியின் நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாடு முழுவதும் ஒரே சிவில் சட்டம் கொண்டு வரப்படும் பிரச்சினையைத் தாங்கள் மக்கள்முன் கொண்டுவரவுள்ளதாகவும், பாரதீய ஜனதா கட்சி மத்தியில் தனிப்பெரும் பான்மையுடன் ஆட்சியமைக்குமானால், இந்த இரண்டு பிரச்சார உறுதி மொழியையும் நிறைவேற்றும் என்று கூறியுள்ளார்.

இராமர் கோவில் விவகாரத்தில் நீதிமன்றம் தீர்ப்புவழங்கத் தாமதப்படுத்துவதால், இஸ்லாமியர்களுடன் தாங்கள் விரைவில் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் 346 லட்.பேர் வறுமையில் வாடுகின்றனர்.

அமெரிக்காவில் வறுமை நிலையில் வாழ்வோரின் எண்ணிக்கை 2002ம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி 17 இலட்சமாக அதிகரித்துள்ளது.

2001ல் வறுமை நிலையில் வாழ்வோரின் எண்ணிக்கை 329 லட்சமாக இருந்தது. அந்த எண்ணிக்கை புதிய கணக்கெடுப்பின்படி 346 லட்சமாக உயர்ந்துள்ளது.

இந்த வீதம் தற்போதைய கணக்கெடுப்பின் படி 12.1 சத வீதமாகத் தெரியவந்துள்ளது.

நடுத்தர வர்க்கத்தினர் வருவாய் 2001ம் ஆண்டில் 1.1 சதவீதம் குறைந்து 42.409 டொலராக சரிந்து விட்டது.

# கிழக்கு டில்லி தீ விபத்தில் நான்கு குழந்தைகள் பலி

கிழக்கு டில்லியில் நேற்று முன்தினம் விடொன்றில் தீ விபத்து ஏற்பட்டதில் 04 குழந்தைகள் உயிரிழந்துள்ளதுடன் 02 பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, இரசாயன திரவம் பெரியபீப்பாக்களிலிருந்து சிறிய பின்களுக்கு மாற்றப்பட்ட போது தீக்குச்சியை யாரோ எரியச் செய்தபோது இத்தீ ஏற்பட்டு அவ் வீட்டைச் சூழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

# மக்களுக்கு உடன் நீதி கிடைக்க நடமாடும் நீதிமன்றங்கள் தேவை

## அப்துல்கலாம் வலியுறுத்து

(புதுடில்லி)

மக்களுக்கு உடனடியாக நீதிகிடைக்க வேண்டும் என்பதற்கிணங்க கிராமங்கள், மாவட்டங்கள் அளவில் நடமாடும் நீதிமன்றங்கள் ஏற்படவேண்டுமென்று இந்திய குடியரசுத்தலைவர் அப்துல் கலாம் வலியுறுத்தியுள்ளார்.

சண்டிகரில் நேற்று முன் தினம் இரண்டு நாட்கள் மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசிய அவர்,

உயர்நீதிமன்றங்களிலும், கீழ்நீதிமன்றங்களிலும் ஏராளமான வழக்குகள் நிலுவையில் உள்ளன. சம்பந்தப்பட்ட மக்கள் பரிதவிப்புடன் காத்து இருக்கிறார்கள்.

எனவேதான் நடமாடும் நீதிமன்றங்கள் ஏற்படுத்துதல் அவசியமாகின்றது என்று கூறியுள்ளார். அத்துடன் நாடு முழுவதும் ஒரே சிவில் சட்டம் தேவை எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

# ஆதரவற்றோரை அரவணைக்கும் “அன்புச்சோலை”



போரினால் நேரடிப்பாதிப்புக்குள்ளாகி தங்கள் உறவுகள், உடைமைகள், உழைப்பாளிகளையிழந்து அரவணைப்பார் யாருமின்றி தவித்துநிற்கும் முதியோர்களை அன்புச்சோலை மூதாளர் பேணலகம் இன்று நேசக்கரம் நீட்டி அரவணைத்து, அவர்களை நிம்மதியாகவும், மகிழ்வுடனும் பேணிக்காத்து வருகின்றது.

கிளிநொச்சி கனகபுரம் 3ஆம் பண்ணையில் அமைந்துள்ள அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தினரால் ஆதரவற்ற 102 முதியோர்கள் இனங்காணப்பட்டு தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

மேற்படி பேணலகத்தினரால் 8ஆண் முதியோர்களும், 10 பெண் முதியோர்களுமாக 18 மூதாளர்கள் பேணலகத்தில் உள்வாங்கப்பெற்று தங்க வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

சமுதாய முன்னேற்ற நிலையம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் செயற்பட்டுவரும் மேற்படி அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தினரால் மேலும் 25 ஆண் மூதாளர்களும், 59 பெண் மூதாளர்களும் வெளிப்பராமரிப்பில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

மூதாளர் பேணலகத்தில் தங்கவைத்துப் பராமரிக்கப்பட்டுவரும் மூதாளர்களுக்கு வைத்திய வசதிகள், மூதாளர்களின் உடல் நிலைக்கு ஏற்ற விதத்தில் ஊட்டச் சத்துணவுகளும் நோய்க்கு ஏற்றதான உணவுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் அவர்களின் பொழுது போக்கிற்கென பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல், மற்றும் சுற்றுலா, உறவினர்களின் நிகழ்விற்கு அழைத்து செல்லுதல் போன்றவற்றினை வழங்கிவருகின்றனர்.

இதன் காரணமாக அன்புச்சோலை பேணலகத்தில் தங்கியுள்ள பயனாளிகள் அனைவரும் தங்கள் வீட்டில் இருப்பதைப் போன்று, நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அங்கு பயனாளிகளாகவுள்ள மெய்யப்பன் திரேசம்மா வயது 70 என்னும் மூதாளர் கருத்துத் தெரிவிக்கையில் தான் அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தின் ஆரம்பப்பயனாளியெனவும், தனது கண்பார்வை தெரியாத நிலையில் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர்களின்



அறிவுறுத்தல்களின் பெயரில் அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில் சேர்க்கப்பட்டு அவர்களின் துணையுடன் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். அங்கு கண்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு தற்போது கண்பார்வை கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்ததுடன் தற்போது கைப்பணி வேலைகள் அதாவது மாலைகட்டுதல், மலர்வளையம் கட்டுதல் போன்றவற்றை தனது ஓய்வு நேரங்களில் செய்து வருவதாகவும் தெரிவித்தார். அதே போன்று மற்றொரு பெண்மூதாளரான க.அலைமேலு (வயது 68) கருத்துக் கூறுகையில்

ஆறுமாதகாலமாக தனது இருகண்களும் பார்வையிழந்து அனாதரவாக இருந்த வேளை, மேற்படி மூதாளர் பேணலகத்திற்கு போராளிகளின் உதவியினால் அறிமுகம் செய்யப்பட்டதாவபின் பேணலகத்தினரால் யாழ். வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சையும் வழங்கப்பட்டது. அதன் விளைவாக தற்போது தனது இருகண்களும் பார்வை பெற்றுள்ளது எனவும், இதன் காரணமாக தற்போது உள்ள ஒரு பிள்ளையினை கண்ணால் பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் கிட்டியுள்ளதெனவும் தெரிவித்தார்.

மற்றுமொரு மூதாளர் பெ. இராமசாமி (வயது 60) தெரிவிக்கையில் நான் கதைக்க முடியாது அவஸ்தைப்பட்டிருந்த வேளையில் அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தினரால் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இன்று சுகதேகியாகவும் கதைக்கத்தகுந்த நிலைக்கு ஆளாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தின் பணியாளர்கள் மூதாளர்களின் உடனடித்தேவைகள் மற்றும் உடல், உள ரீதியான சகல தேவைகளையும் உடனுக்குடன் பூர்த்தி செய்துவருகின்றனர்.

இவர்களின் சேவையானது இன்று உலகலாவிய ரீதியில் அறிமுகமாகிவருவதை அறியக்கூடியதாகவுள்ளது.

அன்புச்சோலை மூதாளர் பேணலக பணிப்பாளர் மி.குரு தெரிவிக்கையில் எமது தேசியத்தலைவரின் எண்ணக் கருவில் உருவான கட்டுமானம் சிறந்த முறையில் நடைபெறுவதற்கு அனைவரினதும் பங்களிப்பும் இன்றைய காலகட்டத்தில் அவசியமாகும். எமது போராட்டம் வலுப்பெற்று எமது மண்ணில் மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழும் நிலை தோன்றுமென்றார்.

## இன்று சர்வதேச முதியோர் தினம்

கனகபுரச்சோதி

# குடாநாட்டு மின் விநியோகம் பாதிப்பு உற்பத்தி அளவை குறைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிற்கு வழங்கப்பட்டு வரும் மின்சாரத்தின் அளவைக் குறைப்பதற்கும், சுன்னாகம் மின்சார நிலையத்தில் உள்ள மின்பிறப்பாக்கியின் எண்ணிக்கையைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறப்படுகின்றது. இதுப்பற்றித் தெரியவருவதாவது.

யாழ். குடாநாட்டில் மின்சாரத்தை வழங்கப் பயன்படுத்தப்பட்டு வரும் மின்பிறப்பாக்கிகளை பராமரிப்பதிலும், புதியனவற்றைக் கொள்வனவு செய்வதிலும் உள்ள இடர்பாடுகள் காரணமாக இத்தகைய மின்வழங்கல் கட்டுப்பாட்டையும், குறைப்பையும் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் இருப்பினும் எரிபொருள் மின்சக்தி அமைச்சுக்கான வரவுசெலவுத்திட்ட விவாதத்திலும் மின்சார சபை தொடர்பாக பாராளுமன்றத்தில் உள்ள விசேட குழுவுடனும் கலந்து பேசி ஆக்கபூர்வமான முடிவொன்றைப் பெற்றுத்தருவதாகக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கூறியுள்ளார்.

# 85 வீதத்திற்கு மேலானோருக்கு குடாநாட்டில் மின் வழங்கல்

## அமைச்சர் கரு கூறுகிறார்.

கிராமிய மின்சார திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண குடாநாட்டில் 85 வீதத்திற்கு மேற்பட்டோருக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாக மின்சார எரிபொருள் அமைச்சர் கரு ஜயசூரிய கொழும்பில் நடந்த பத்திரிக்கையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். கூடுதலாக அரசாங்க கட்டுப்பாட்டுக்குள் உள்ள இடங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார் அரசாங்கம் மின்சாரம் வழங்குவதில் இனரீதியாகவோ, அரசிய ல் ரீதியாகவோ பாரபட்சம் காட்டவில்லை.

தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கையும் இந்தியாவும் நகர அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை எற்படுத்தியுள்ளது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியையும், வேலை வாய்ப்பையும் எற்படுத்துவதே நோக்கம் என அமைச்சர் தெரிவித்தார். இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள முக்கிய உதவி நிறுவனமாக ஆசிய அபிவிருத்தி வங்கி திகழ்வதாக அமைச்சர் கூறினார்.

# சர்வதேச ஒத்துழைப்புடனான சமாதானத்தை நிறைவேற்ற சகிப்புத்தன்மை இன்றியமையாதது

## - அமைச்சர் வஜிர அபேவர்த்தன

(கொழும்பு)

சர்வதேச ஒத்துழைப்புடன் அரசாங்கம் இனப்பிரச்சனை தீர்வுக்கு எடுத்துவரும் ஒவ்வொரு படியையும் மக்கள் பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென அமைச்சர் வஜிரன அபேவர்த்தன கேட்டுக் கொண்டுள்ளார்.

20 வருட யுத்தமானது தற்போதைய மற்றும் இனிவரும் பரம்பரைகளின் எதிர்காலத்தை நாசமாக்குவதை தடுப்பதற்கு மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு செயற்பட வேண்டும்.

இனப்பிரச்சனைக்கு அரசாங்கம் இறுதித் தீர்வை எடுக்கும் மட்டும் மக்கள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். சமாதான பேச்சு வார்த்தையின் கடைசி நாளை பலர் கேட்கின்றனர். இனப்பிரச்சனைக்கு உடனடி தீர்வு வேண்டுமென கேட்கின்றவர்கள் இது ஒரு சாதாரன விடயமல்ல என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் தற்போதைய நாட்களில் பத்திரிகையாளர்கள் தங்கள் கடமைகளை சுதந்திரமாக மேற்கொள்ளக் கூடிய வகையில் இருப்பதாகவும் கூறினார்.

# லால் காந்தவின் பேச்சு குறித்து மே.மா. சபையில் கலந்துரையாடல்

(கொழும்பு)

சனாதிபதிக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் லால் காந்த தெரிவித்ததாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் மேல்மாகாண சபை உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் ஒரு கலந்துரையாடலை நடத்தியுள்ளனர்.

மேல்மாகாண சபையில் நடந்த இந்த விவாதத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியினர் கலந்துகொள்ளவில்லை. இதேவேளை நாட்டின் சனாதிபதி எந்தக் கட்சியை சேர்ந்தவராக இருந்தாலும், சனாதிபதியின் கௌரவத்திற்குக் கேடு விளைவிக்கும் எந்த ஒருவரையும் அனுமதிக்கக் கூடாது என்ற அடிப்படையிலேயே இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ள நிலையில் பொது சன ஐக்கிய முன்னணியினர் இது ஐக்கிய தேசிய கட்சியினர் சனாதிபதி மீது காட்டும் கருசனையில்லை என்றும் தமது கட்சியின் நலனைக்கருத்தில் கொண்டே ஐக்கிய தேசியக் கட்சியினர் இதனை ஏற்பாடு செய்ததாகவும் தெரிவித்துள்ளனர் (32)

# பாடசாலை செல்லாத மாணவர்கள் தொடர்பாக வீடுவீடாக ஆராய்வு

## திருமலை மாவட்டத்தில் ஆரம்பம்

பாடசாலை செல்லாத மாணவர்கள் தொடர்பாக வீட்டுக்கு வீடு ஆய்வு செய்யும் யுனிசெவ் நிறுவனத்தின் பணி நேற்று முன்தினம் திருமலை மாவட்டத்தில் மூதூர் கல்விக் கோட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை செல்லாத மாணவர்கள் தொடர்பான விபரங்களை வீட்டுக்கு வீடு சென்று அவர்களது பெயர்கள், முகவரிகள் போன்றவற்றைப் பெற்று அறிக்கை தயாரிக்கும் யுனிசெவ் நிறுவனத்தின் இப்பணி ஏற்கனவே திருகோணமலை மற்றும் கந்தளாய் கல்விக் கோட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் நேற்று முன்தினம் ஈச்சிலம்பற்றுப் பகுதியிலுள்ள பூனகர் திருவள்ளுவர் வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

# தற்காலிக சந்தையாவது அமைக்க வேண்டுகை!

இயக்கச்சிப் பகுதியில் மக்கள் பாவனைக்காக உடனடியாக தற்காலிக சந்தையாவது அமைக்குமாறு பிரதேச சபையிடம் கோரிக்கை ஒன்றினை அப்பகுதி வாழ் மக்கள் விடுத்துள்ளனர்.

1990 ற்கு முன்னர் இப்பகுதியில் மரக்கறிச் சந்தை, மீன் சந்தையென பாரியளவில் காணப்பட்ட சந்தையானது 1990 ற்குப் பின்னர் பாரிய யுத்த அனர்த்தங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன், அதன் பின்னர் அச் சந்தை இருந்த இடம் காணமுடியாது சிறிலங்கா இராணுவத்தினரால் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச ரீதியில் படிப்படியாகக் கிடைக்கும் அங்கீகாரம்

ஐரோப்பிய யூனியன் கடந்த வாரத்தில் வெளியிட்ட பயங்கரவ்வாதப் பட்டியலில் விடுதலைப்புலிகள் இயக்கம் இடம்பெறாமல் போனமையும், அயர்லாந்தில் இடைக்கால நிர்வாக சட்ட வரைவு குறித்து விடுதலைப் புலிகள் சர்வதேச சட்ட நிபுணர்களுடன் ஆய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளமையும் விடுதலைப் புலிகள் இயக்கம் சர்வதேச அரசியலைச் சிறப்பாகக் கையாள்வதில் தேர்ச்சி பெற்றுவிட்டனர் என்பதற்கான குறிகாட்டிகளே ஆகும்.

விடுதலைப்புலிகள் குறித்த சர்வதேசத்தின் பார்வை கடந்த காலத்தில் சற்றுக் குழப்பம் விளைவிப்பதொன்றாகவே இருந்து வந்துள்ளது. தமது விடுதலைப் போராட்ட வழிமுறையில், அதன் வழிமுறைகள் அவர்களின் பார்வையில் "பயங்கரவாத செயற்பாட்டின்" ஒத்தது என்பதாகவே இருந்திருப்பினும், சர்வதேச ரீதியில் எவருக்கும் பாதிப்புக்களை விளைவிக்கும் வகையிலான நடவடிக்கை

11ஆம் திகதித் தாக்குதலுக்கு முன்பாகவே சர்வதேச நாடுகளின் குறிப்பாக வல்லாதிக்கச் சக்திகளின் சர்வதேச ரீதியிலான பார்வையை நன்கு மதிப்பீடு செய்திருந்தது. அமெரிக்கா போன்ற வல்லாதிக்க நாடுகள், உலகின் பல பாகங்களிலும் இடம்பெறும் ஆயுதப் போராட்டங்கள் குறித்து ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருப்பினும், செப். 11 தாக்குதலானது, அவற்றின் செயற்பாட்டிற்கான சந்தர்ப்பத்தை வழங்கின என்பதே உண்மையாகும்.

இந்நிலையில், செப். 11இன் பின்னர் உலக விடுதலைப் போராட்ட அமைப்புக்கள் மீது கொடுக்கப்படும் அழுத்தத்தில் இருந்து தமது மக்களின் விடுதலைக்காகப் போராடும் அமைப்புக்கள் எத்தனை மீண்டுவரும் என்ற, கேள்வி பலமாகவே இருந்தது. ஏனெனில், அத்தனை தூரம் அழுத்தங்கள் போடப்பட்டது மட்டுமல்ல ஆயுத ரீதியிலான நடவடிக்கைக்கும் அமெரிக்கா போன்ற வல்லாதிக்கச் சக்திகள் தயாராகவே இருந்தன.



களை அவர்கள் மேற்கொண்டதாக இருந்ததில்லை.

அது மட்டுமல்ல, விடுதலைப்புலிகள் அமைப்பின் கிளைகள் உலகின் பல நாடுகளில் இயங்கினும், அவை அந்நாடுகளின் சட்டம், ஒழுங்கிற்கு உட்பட்டவையாகவே உள்ளன. அந்நாடுகளின் அமைதிக்குக் குந்தகம் விளைவிப்பவையாக அவை இருந்ததில்லை. சுருக்கமாகக்கூறின், விடுதலைப்புலிகள் அமைப்பின் செயற்பாடுகள் எந்த நாட்டில் இருப்பினும் அவர்கள் அந்நாட்டு அரசுகளுக்குத் தொல்லை கொடுப்பவர்களாக இருந்ததில்லை.

ஆயினும், யுத்தம் தொடர்ந்த காலத்தில் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட தீவிர பிரச்சாரத்தின் காரணமாக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப்புலிகளைச் சேர்த்துக் கொண்டன.

இதேவேளை, ஐரோப்பிய நாடுகள் பொதுவில் சில கட்டுப்பாடுகளை விதிக்க முற்பட்ட

இந்நிலையானது, விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் தோல்வி கண்டிருந்த சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஒரு வகையில் தென்பூட்டும் ஒன்றாகவே இருந்தது. ஏனெனில், விடுதலைப் புலிகளை ஏற்கனவே தடை செய்திருந்த அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் துணையுடன் விடுதலைப்புலிகளைத் தோற்கடித்துவிடவோ ஓரம்காட்டிவிடவோ முடியுமென அது நம்பிக்கை கொண்டிருந்தது.

ஆனால், செப்.11 இற்கு முன்னதாகவே சர்வதேச ரீதியிலான அழுத்தங்கள், நெருக்கடிகள் என்பனவற்றை எதிர்கொள்ள விடுதலைப்புலிகள் இயக்கம் தயாராகி இருந்தது என்பதே உண்மை நிலையாகும். இதன் காரணமாக, இன்று பல விடுதலைப் போராட்ட அமைப்புகள் நெருக்கடியில் இருந்து மீள முடியாமலும், செயற்பட முடியாமலும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள சூழ்நிலையிலும் விடுதலைப் புலிகள் சர்வதேச நாடுகளின் அங்கீகாரம் பெற்றதொரு அமைப்பாக வளர்ச்சி கண்டுள்ளது.

குறிப்பாக, அமெரிக்கா பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்ற ரீதியில் நேரடி



போதும் அவ்அமைப்பினைத் தடை செய்யும், அளவிற்குச் செல்லவில்லை. ஆயினும் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் மீது 2001 ஆம் ஆண்டு செப். 11ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து பயங்கரவாத அமைப்புக்கள் என்ற பெயரில் விடுதலை அமைப்புக்கள் மீதும் பலமான அழுத்தங்கள் விழவே செய்தன. இதற்கு விடுதலைப்புலிகள் அமைப்பும் விதிவிலக்கானதாக இருக்கவில்லை.

ஆயினும், விடுதலைப்புலிகள் இயக்கம் செப்.

யாகவும் அன்றி இராணுவ உதவிகள் என்ற ரீதியில் விடுதலைப் போராட்ட அமைப்பிற்கு எதிராகவும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள நிலையில் விடுதலை அமைப்புக்கள் நெருக்கடிகளை/ அழுத்தங்களை எதிர்நோக்குவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். அத்தோடு, சர்வதேச ரீதியில் தம்மீதான குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் அளிப்பதும், அதிலிருந்து பாதுகாத்துக் கொள்வதென்பதும் இலகுவான காரியம் அல்ல. இதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய அரசியல்-இராஜதந்திர பணி நிரம்பவே இருக்கும். ஆனால், விடுதலைப்

புலிகள் இயக்கம் இவ்விடயத்தில் திறம்படச் செயலாற்றியுள்ளதையே அண்மைய நிகழ்வுகள் வெளிப்படுத்துவதாக உள்ளது.

இந்த வகையில், விடுதலைப்புலிகள் அமைப்பானது வெற்றிகரமான முறையில் தமது அரசியல்-இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்றே கூறலாம். அவ்வாறு இல்லாதுவிட்டால், இன்று சர்வதேச ரீதியில் விடுதலைப்புலிகள் பெற்றுக்கொண்டுள்ள அந்தஸ்தையும், தம்மைப் பற்றிச் சர்வதேச நாடுகளின் பார்வையில் மாற்றத்தினையும் அவர்களால் ஏற்படுத்தியிருக்க முடியாது.

இன்றும் விடுதலைப்புலிகள் மீது அமெரிக்காவும், பிரிட்டனும் விதித்திருந்த தடைகளை அதாவது, பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளதை நீக்காமல் இருக்கலாம். ஆனால், புலிகள் குறித்து அவர்கள் பார்வையில் மாற்றங்கள் ஏற்படாமல் இல்லை. அவ்வாறு இல்லாதுவிட்டால், அமெரிக்கா, பிரிட்டன் போன்றவற்றின் தலைமையில் செயற்படும் அன்றி அவர்களின் உணர்வுகளுக்கு ஏற்பச் செயற்படும் நாடுகள் விடுதலைப்புலிகளுடன் நெருக்கமான உறவுகளைப் பேணுவது என்பது சாத்தியப்பாடானதொன்றாக இருந்திருக்கமாட்டாது.

கடந்த வாரத்தில் ஐரோப்பிய யூனியன் வெளியிட்ட பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப்புலிகளின் பெயர் இடம்பெறாமை, இந்நாடுகளின் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினை வெளிப்படுத்துவதாக இருப்பினும், இதற்கு முன்னதாகவே இந்நாடுகள் - அதாவது, ஐரோப்பிய நாடுகள் - இத்தகைய போக்கை வெளிக்காட்டத் தொடங்கிவிட்டன.

நோர்வே அரசு சமாதான ஏற்பாட்டாளர்களாக செயற்படுவதினால், அதன் நடவடிக்கைகளைப் புலிகளுக்கு ஆதரவானவை எனக்காட்ட முடியாது போயினும், ஏனைய ஐரோப்பிய நாடுகள் தமது பார்வையில் மாற்றத்தினை வெளிப்படுத்தியிருந்தன என்பதற்கான அறிகுறிகள் ஏற்கனவே தெரியத் தொடங்கியிருந்தன. எடுத்துக்காட்டாக, ஜேர்மனி தமது நாட்டில் சிறிலங்கா அரசுபுலிகள் பேச்சுவார்த்தைகளை நடத்த அனுமதி அளித்தமையில் இருந்து விரைவில் அயர்லாந்தில் சர்வதேச சட்டவல்லுநர்களோடு விடுதலைப்புலிகள் பேசுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது வரை இம்மாற்றத்தின் வெளிப்பாடுகளே ஆகும்.

அதிலும், குறிப்பாக, பிரான்ஸ் நாடு விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சட்ட ஆலோசகர்களின் கூட்டத்தை நடத்துவதற்கான அனுமதியையும், அதற்கான ஒத்துழைப்பையும் வழங்கியமையும், சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சு விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளரை உத்தியோகபூர்வமாக

அழைத்திருந்தமையும் முக்கியத்துவம் மிக்கவையாகும்.

இந்த வகையில், அயர்லாந்தில் நடைபெறவுள்ள சர்வதேச சட்ட ஆலோசகர்களுடனான விடுதலைப்புலிகளின் கூட்டமும் சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளுக்கு கிடைத்துவரும் அங்கீகாரத்தின் வெளிப்பாடு என்றே கொள்ளுதல் முடியும்.

ஒரு புறத்தில், அயர்லாந்தில் ஒரு சந்திப்பினை நடத்துவதற்கு விடுதலைப்புலிகளுக்கு கிடைக்கப்பெற்ற அனுமதியானது, பிரிட்டன் விடுதலைப்புலிகள் தொடர்பான தனது பார்வையில் மாற்றத்தினை வெளிப்படுத்தியுள்ளதன் வெளிப்பாடு என்றே கொள்ளுதல் வேண்டும்.

ஏனெனில், அயர்லாந்து பிரிட்டனின் முழு அளவிலான செல்வாக்கிற்கு உட்பட்ட நாடு. இந்நிலையில், விடுதலைப்புலிகள் மீது பிரிட்டனில் தடையிருக்கின்றபோதும் அயர்லாந்தில் புலிகள் கலந்து கொள்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியானது பிரிட்டனுடனான இராஜதந்திர முயற்சிகளை விடுதலைப்புலிகள் திறம்படக் கண்டதன் வெளிப்பாடாகவே கொள்ளத்தக்கதாகும்.

இதன் பின்னாக, ஐரோப்பிய யூனியன் பயங்கரவாதப் பட்டியலில் புலிகள் இடம்பெறாமையானது ஐரோப்ப அடங்கலாகப் புலிகள் மீதான பார்வையில் ஏற்பட்ட மாற்றம் என்றே கொள்ளக்கூடியதாகும். இந்த வகையில் பார்க்கையில், விடுதலைப்புலிகள் சர்வதேச ரீதியிலான தமது அரசியல்-இராஜதந்திர நடவடிக்கைகளை திறம்பட மேற்கொண்டு வருவதாகவே கொள்ள முடியும்.

இதேவேளை, ஐரோப்பிய நாடுகள் வெளிக்காட்டுவது போன்ற அங்கீகாரத்தினை அமெரிக்கா இன்னமும் வெளிக்காட்டவில்லை ஆயினும், ஆரம்பத்தில் அமெரிக்கா வெளிப்படுத்தியதான கடுமையான போக்கை அமெரிக்கா தற்பொழுது வெளிப்படுத்துவதாக இல்லை. இந்நிலைக்கு விடுதலைப்புலிகள் தொடர்பாக அமெரிக்காவின் பார்வை மாறிவிட்டது என அர்த்தம் கொள்ள முடியாது எனக்கூறினும், சர்வதேச சூழலில் விடுதலைப்புலிகள் தமக்குச் சாதகமாக உருவாக்கிக் கொண்டுள்ள சூழ்நிலை இதற்குக் காரணமாகலாம்.

இந்த ரீதியில், விடுதலைப்புலிகள் சர்வதேச ரீதியிலான தம் மீதான அழுத்தத்தை வெற்றிகரமாக தளர்வடையச் செய்துள்ளமை மட்டுமல்ல, தம்மீதான சர்வதேசத்தின் பார்வையையும் மாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளனர் என்றே கூறுதல் முடியும்.

**ஜெயராஜ்**

## சிறந்த பண்ணையாளர்களை தெரிவு செய்யும் போட்டி

கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்களை ஊக்குவிக்கும் முகமாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தால் சிறந்த பண்ணையாளர்களைத் தெரிவு செய்யும் போட்டி நடைபெறவுள்ளது.

2003ஆம் ஆண்டிற்கான தெரிவுப் போட்டியில் பங்குபற்றி தெரிவு செய்யப்படும் பண்ணையாளர்களுக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

எனவே, இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கால் நடை பண்ணையாளர்கள் கிளிநொச்சி பூநகரி ஆகிய கால்நடை வைத்திய பண்ணையுடன் தொடர்பு கொண்டு தங்கள் விண்ணப்பங்களை குறுகிய காலத்தினுள் ஒப்படைக்குமாறு கிளிநொச்சி பூநகரி கால்நடை வைத்தியர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (05)

## கிளைமார்பு நோய் சிகிச்சை

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பில் அமைந்திருக்கும் மாவட்ட வைத்திய சாலையில் வவுனியா பொதுவைத்தியசாலையில் இருந்து வைத்தியர் வருகைதந்து சிகிச்சையை மேற்கொள்ளவுள்ளதால் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது புதன்கிழமைகளில் கிளை மார்பு நோய் கிளினிக் கிசிச்சை நடைபெறவுள்ளது என மாவட்ட வைத்திய அதிகாரி ஜீ.சி. தர்மேந்திரா தெரிவித்துள்ளார். (26)

## பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மேற்கொள்ள ஏற்பாடு

ஜேர்மனியில் இருந்து வவுனியா பொது வைத்தியசாலைக்கு வருகை தந்துள்ள மருத்துவக்குழு 09-10-2003 ஆம் திகதி தொடக்கம் 22-10-2003 ஆம் திகதி வரை வவுனியா பொது வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள உள்ளனர் என்பதையும், பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை செய்ய விரும்புவோர் புதுக்குடியிருப்பில் அமைந்திருக்கும் மாவட்ட வைத்திய சாலையில் அல்லது கட்டம் -1 வைத்தியசாலை, முல்லைத்தீவில் பதிவுகளை மேற்கொண்டு எதிர்வரும் 05-10-2003ஆம் திகதி வைத்தியசாலை விடுதியில் தங்குமாறு மாவட்ட வைத்திய அதிகாரி ஜீ. சி. தர்மேந்திரா தெரிவித்துள்ளார். (26)

## பிரதமருக்கு அறிக்கை

சிறிலங்காவின் 28 அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்களின் வன்னி விஜயம் குறித்து பிரதமருக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர். பிரதமர் ரணிலின் செயலர் பிரட்மன் வீரக்கோனின் ஆலோசனையின் பேரில் கடந்த சனிக்கிழமை மாலை வன்னிக்கு வந்த இவர்கள் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியின் பல பகுதிகளுக்கும் நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளனர்.

# அதிகாரத்தை பிரயோகிக்க சனாதிபதி முயற்சி

# நாடு திரும்பிய பிரதமரை சந்திக்கவும் மறுப்பு

## - அரசியல் சகவாழ்வில் மேலும் விரிசல்

(கொழும்பு)

**நாட்டின் நலன் கருதி சில முக்கிய விடயங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியமும், அவசரமும் ஏற்பட்டிருப்பதால் பிரதமருடன் கதைத்துக் கொண்டிருக்க நேரமில்லை என்று சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதமரின் கோரிக்கையை நிராகரித்துள்ளார்.**

அரசாங்கத்தின் போக்கில் முழுமையாக நம்பிக்கை இழந்துள்ள சனாதிபதி தமக்கிருக்கும் நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி சில அவசர நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்துத் தொடர்ச்சியாக ஆராய்ந்து வருவதாக சனாதிபதி செயலக வட்டாரம் நேற்றுமுன்தினம் கூறியுள்ளது.

ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்திற்குச் செல்வதற்கு முன்னர் சனாதிபதியைச் சந்தித்துப் பேச பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுத்த முயற்சியும் இறுதி நேரத்தில் கைநழுவிப்போயிருந்தது.

பிரதமரைச் சந்திக்க சனாதிபதி அன்று நேரம் ஒதுக்கிக்கொடுத்திருந்த போதிலும் இடைப்பட்ட காலத்தில் உருவான சிக்கல் காரணமாக இந்தச் சந்திப்பை சனாதிபதியே இறுதி நேரத்தில் ரத்துச் செய்திருந்தார்.

இதனையடுத்து சனாதிபதியை சந்திக்காமலேயே பிரதமர் விக்கிரமசிங்க அமெரிக்கா புறப்பட்டார்.

ஐ.நா.பொதுச் சபையில் உரை நிகழ்த்திய பின்னர் நேற்று முன்தினம் நாடு திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று செவ்வாய்க்கிழமை அல்லது இன்று சனாதிபதியை சந்திக்க நேரம் ஒதுக்கித்தருமாறு கேட்டிருந்தார்.

பிரதமரின் இந்தக் கோரிக்கை குறித்து சனாதிபதி அக்கறை காட்டவில்லை எனவும் பிரதமரைச் சந்திக்க வேண்டிய அவசரம் தற்போதைக்கு தமக்கு இல்லை என்றும் சனாதிபதி தெரிவித்துள்ளதாக சனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜனதாச பீரிஸ் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

அண்மைக்காலமாக சனாதிபதிக்கும் அரசுக்குமிடையே அரசியல் சகவாழ்வு விரிசலடைந்து கொண்டே போய் தற்போது முற்றாக இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனை சனாதிபதியே கடந்த வாரம் உறுதியாக அறிவித்துவிட்டார்.

சமாதானப் பேச்சுக்கள் முதல் சகல விடயங்களிலும் அரசு மூடிமறைத்தே செயற்பட்டு வருகின்றது. அரசாங்கம் எனக்கு விசுவாசமாக நடந்து கொள்ளவில்லை.

எனவே நாட்டின் நலன் கருதி முக்கிய விடயங்களில் கவனம் செலுத்தவேண்டிய அவசியமும், அவசரமும் ஏற்பட்டிருப்பதால் பிரதமரைச் சந்திக்க வேண்டிய அவசரம் இல்லை என சனாதிபதி தெரிவித்திருப்பதாக ஊடகப்பணிப்பாளர் ஜனதாச பீரிஸ் கூறியுள்ளார்.

# வெளிநாட்டு நிறுவனங்களுக்கு குறுகிய அரசியல் இலாபத்திற்காக மீன்பிடி அனுமதி

## - மீன்வளத்துறை அமைச்சர் நிராகரிக்கிறார்

(கொழும்பு)

குறுகிய அரசியல் லாபத்திற்காக இலங்கையைச் சுற்றியுள்ள கடற்பிரதேசங்களில் வெளிநாட்டு நிறுவனங்களை மீன் பிடிக்க தமது கட்சி ஆதரவுக்குழுக்கள் அனுமதித்துள்ளது என்ற குற்றச்சாட்டை சிறிலங்காவின் மீன்வளத்துறை அமைச்சர் மகிந்த விஜேசேகர அறிக்கை மூலம் நிராகரித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: சிறிலங்காவிற்கு சொந்தமான கடல்வலயமாக அதன் அயல் கடற்பிரதேசங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு காணப்படும் உயிர் வாழ் உயிரற்ற பொருட்கள் எமது நாட்டுக்கே உரியது. அங்கு மீன் பிடித்தலைக் கட்டுப்படுத்துவது சிறிலங்காவைப் பொறுத்தது. வெளிநாட்டு நிறுவனங்கள் அதில் தலையிட முடியாது.

இந்நிலையில் குறுகிய அரசியல் லாபம் கருதி அதனை எமது அமைச்சு வெளிநாட்டவருக்கு விற்றுவிட்டது எனக்கூறும் கூற்றில் எவ்வித உண்மையும் கிடையாது என அவ்வறிக்கை கூறுகிறது.

## வாகன விபத்து 13பேர் காயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதியில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தில் மூன்று குழந்தைகள் உட்பட பதின்மூன்று பேர் படுகாயமடைந்தனர். சந்திவெளி பகுதியிலேயே இந்த விபத்து நேரிட்டது.

பயணிகளை ஏற்றிச் சென்ற வான் ஒன்றும் சிறிலங்கா இராணுவத்தினரின் ட்ரக்வண்டியொன்றுமே நேருக்கு நேர் மோதிக் கொண்டன.

## குடும்பப் பொறுப்பேற்கும் பெண்களுக்கு சுயதொழில் கடன்

(முள்ளியவளை)

முள்ளியவளை பிரதேச பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் கரைதுறைப்பற்று பகுதிக்குட்பட்ட உழைப்பாளிகளை இழந்த குடும்பபொறுப்பாளிகளான 10 பெண்களுக்கு சுய தொழில் முயற்சிக்காக கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கடன் வழங்கல் நிகழ்வானது முள்ளியவளைப் பிரதேச பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவன செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் கடந்த 23 அன்று பி.ப.3.00 மணிக்கு பிரதேச பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் செல்வி சோ.கலாமலர் தலைமையில் ஆரம்பமானது.

மேற்படி கடன் வழங்கல் தொடர்பாக பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவன திட்ட இணைப்பாளர் செல்வி சுகந்தா தண்ணீரூற்று வலய அரசியல் துறைப்பொறுப்பாளர் அ.சுழவன் ஆகியோர் கருத்துரை வழங்கியதையடுத்து திட்ட இணைப்பாளர் செல்வி சுகந்தாவினால் கடனுதவி வழங்கி ஆரம்பிக்கப்பட்டதையடுத்து தலா 2000ரூபா விதம் 10 குடும்ப பொறுப்பாளி பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச இணைப்பாளர் செல்வி சோ.கலாமலர் தெரிவித்தார். (ஆ)


## மூன்றாம் ஆண்டு நீங்காத நினைவில்



எல்லைப்படை வீரன்

சிவாஸ்கரன்/தம்பி

சிவசிதம்பரம் சிவாஸ்கரன்

மழலையாய்
20 – 11 – 1979

மாவீரனாய்
01 – 10 – 2000

விடுதலைக்காய் வீறுநடை போட்டு
விதையாகிப்போன வீரமகனே
நீ முழு நிலவாய் வருவாயென -நாமிருக்க
எ மை விட்டுப் பிரிந்ததேனோ
மூன்றாண்டென்ன மூவாயிரம் ஆண்டானாலும்
உன்நினைவில் என்றும் வாழும்
உன்பாச உறவுகள்

அண்ணாசிலையடி
அக்கராயன்! (3776)

அன்பு அப்பா, அம்மா,
சகோதரர்கள், உறவுகள்


## இன்று ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச மூதாளர் தினம் இன்று முதல் எதிர்வரும் 7ம் திகதி வரை சகலமூதாளர் இல்லங்களிலும் அனுஸ்டிக்கப்படவுள்ளது.

நாளை காலை கனகபுரம் கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்புச்சோலை மூதாளர்தின விழா நடைபெறவுள்ளதுடன் மூதாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் சிறப்புரைகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நலன்விரும்பிகள் அனைவரும் கலந்து மூதாளர்களை கௌரவிக்கும் வண்ணம் அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தினர் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)

## புனரமைப்பு

கிளிநொச்சி டிப்போ - கோணாவில் வீதிப்புனரமைப்பு பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

நேற்று முதல் பாதையினை செப்பனிடும் இயந்திரத்தின் மூலம் மேற்படி வீதியில் கிரவல் மண் குவியல்கள் பரவப்பட்டு வீதி செப்பனிடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கிளி. தொழில் திணைக்கள செயற்பாட்டு கலந்துரையாடல்

(அலுவலகச் செய்தியாளர்)

பிரதித் தொழில் ஆணையர் மற்றும் தொழிற் திணைக்கள உயர் அதிகாரிகள் குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டனர்.



நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு கிளிநொச்சி மாவட்ட தொழில் திணைக்களத்திற்கு சென்று பார்வையிட்டதுடன், கிளி மாவட்ட தொழில் திணைக்கள உத்தியோகத்தர் திருமதி ஆ.லீலாவதியுடன் திணைக்கள செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடினர்.

அடுத்து பிரதி தொழில் திணைக்கள ஆணையர் வி.ஆர்.கருவராடசி, தொழில் நுட்ப பிரதிதொழில் திணைக்கள ஆணையர் எவ்.ஜே.சதானந்தம் மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை எந்திரி பி.ஜி.அபயசிங்க, வவுனியா மாவட்ட உதவித் தொழில் திணைக்கள ஆணையர் கே. மகேஸ்சு யாழ். மாவட்ட உதவி தொழில் திணைக்கள ஆணையர் எஸ். முத்துக்குமாரசாமி, வவுனியா தொழில் திணைக்கள சிரேஸ்ட தொழில் உத்தியோகத்தர் எஸ் நகுலேஸ்வரபிள்ளை ஆகியோர் கொண்ட குழுவினர் கிளி அரச அதிபர் தி.இராசநாயகத்தை அவரது செயலகத்தில் சந்தித்து கிளி. மாவட்ட தொழில் திணைக்களம் இயங்குவதற்கான தேவைப்பாடுகள், இனங்காணல் சம்பந்தமாக கலந்துரையாடல் இடம்பெற்றது.

கிளிநொச்சி தொழில் திணைக்களம் அமைப்பதற்கான காணிவழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்வதாக அரசஅதிபர் மேற்படி குழுவினருக்கு தெரிவித்துள்ளார் (சோ)

# மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவர் இல்லத்தின் மீது குண்டுத்தாக்குதல்

தெஹிவளை, கல்கிசை மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முந்தினம் இரவு இடம் பெற்றது.

இரு வாகனங்களில் வந்த நபர்களினால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக தெகிவளை பொலிசார் தெரிவித்தனர். என்றும் இதனால் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை என அறிவிக்கப்படுகின்றது.


## பணிநிலை வேண்டுகை

அரசியல் துறை நிதிப்பிரிவில் பின்வரும் பணிநிலைகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பிப்போர் தங்களது சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

### பணிநிலைகள் :-

01.கணக்காளர்-உதவி
02.கணக்காய்வாளர்-உதவி
03.கணக்குப் பதிவாளர்
04.கணக்கு எழுதுனர்
05.உதவிக்களஞ்சியக் காப்பாளர்
06.உதவியாளர்

### கல்வித்தகைமை :-

பணிநிலை-01,02

க.பொ.த(உ/த)வர்த்தகப் பிரிவில் மூன்று பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் முன்னனுபவம் இருப்பின் விசேட தகைமையாக கருதப்படும்.

பணிநிலை-03,04

க.பொ.த(உ/த)வர்த்தகப் பிரிவில் மூன்று பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பணிநிலை-05,06

முன்னனுபவம் விரும்பத்தக்கது.

### அகவை எல்லை :-

18-45வரை இருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி
15.10.2003

கடித உறையில் எழுதப்பட வேண்டிய முகவரி-
ஆளணிப்பகுதி,
நிதிப்பிரிவு,
அரசியல்துறை,
தமிழீழம்.

விண்ணப்பங்கள் சேர்க்க வேண்டிய முகவரிகள்:-
முள்ளியவளை-மின்வழங்கல் சேவை நிறுவனம்.
கிளிநொச்சி - ஈழநாதம் பணிமனை, பரவிப்பாஞ்சான்
மல்லாவி - மின்வழங்கல் சேவை நிறுவனம்.
பளை - திரைப்பட வெளியீட்டுப்பிரிவுத் தொடர்பகம்.
புதுக்குடியிருப்பு - திரைப்பட வெளியீட்டுப்பிரிவுத் தொடர்பகம்.

(சி.8626)



## சிந்தனைக்கு

எமது மக்களின் சுதந்திரத்தையும் கௌர வத்தையும் நிலைநாட்டவே நாம் ஆயுதங் களை ஏந்தினோம் அந்தச் சுதந்திரமும் கௌரவமும் நிலை நாட்டப்படாத வரை எமது போராட்டம் தொடரும் என்பதை, தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறவிரும்புகின்றேன்.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 01-10-2003

# வேலையற்ற அரசியல் வாதிகள்?

"13ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கே போதிய அதிகாரங்களை வழங்க மறுக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு உரிய அதிகாரங்களையும் கொண்ட இடைக்கால நிர்வாகசபையை வழங்கும் என ஒருபோதும் எதிர்பார்க்கமுடியாது" என்ற எதிர்க்கட்சித் தலைவரின் கூற்றுக்கள் அவரினதும், அவரது கட்சியினதும் செயற்பாட்டிற்கும் முற்றிலுமாக எதிர்மாறானதாகவே உள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளது போன்று மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை ஐ.தே.முன்னணி அரசாங்கம் வழங்காது இருக்கலாம். மறுவளமாக மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் தற்பொழுது வழங்கப்பட வேண்டுமா? என்ற கேள்வியும் இல்லாமலில்லை.

ஏனெனில், மாகாண சபைகள் எதற்காக அமைக்கப்பட்டனவோ, அந்நோக்கமானது தோல்வியில் முடிவடைந்துவிட்டது. அதாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைக்கப்பட்ட இம் மாகாணசபைகள் வடக்கு-கிழக்கில் எப்பொழுதோ தனது செயற்பாட்டை இழந்துவிட்டது. ஆகையினால், ஏனைய மாகாண சபைகளை உருவாக்கியமையானது தேவையற்ற பொருள்விரயம் என்ற நோக்கிலேயே தற்பொழுது பார்க்கப்படுகின்றது.

ஆனால், அதற்காக வடக்கு-கிழக்கு மாகாண சபை செயற்பட்டிருக்குமானால் ஐ.தே.முன்னணி அரசாங்கம் அதிகாரங்களை வழங்கியிருக்கும் என்பது அர்த்தமல்ல. மாகாணசபையை தமிழ் மக்கள் நிராகரித்த போதும் வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முதல்சபையைப் பொறுப்பேற்றுக்கொண்ட வரதராஜப்பெருமாள் கூட எதுவித அதிகாரங்களையும் அரசாங்கம் வழங்கவில்லை எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது ஒருபுறமிருக்க, மாகாணசபைகள் உருவாக்கப்பட்ட பின்னர் பொ.ஐ.முன்னணியும் ஏழு ஆண்டுகள் ஆட்சி அதிகாரத்தைத் தனது கையில் வைத்துக்கொண்டிருந்தது. ஆனால், அக்காலப்பகுதியிலும் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை வழங்க முன்வரவில்லை. ஏதோ மாகாணசபை என்ற பெயரில் சிலருக்குப் பதவிகளையும் வசதிகளையும் வழங்கியதே அதன் பணியாக இருந்தது.

ஆனால், மாகாணசபைகளுக்கு அதிகாரங்களை வழங்க ஐ.தே.முன்னணி அரசாங்கம் மட்டுமல்ல, பொ.ஐ.முன்னணி அரசாங்கமும் தயாராக இருக்கவில்லை என்பதே கடந்தகால அனுபவமாகும். ஆகையினால் மாகாணசபைக்கு அதிகாரங்களை வழங்குவார்களா? என்ற கேள்வி ஒருவகையில் அர்த்தமுள்ளதொன்றாகவே இருக்கலாம்.

ஆனால் மாகாணசபைக்கு அதிகாரங்களை வழங்காது இருந்தது போன்று இன்றைய அரசியல் சூழ்நிலையில் இடைக்கால நிர்வாக சபைக்கு அதிகாரங்களை வழங்காது இருக்க முடியுமா? என்பது கேள்விக்குரியதே. அவ்வாறு வழங்காது அதாவது ஏமாற்றுதல் அன்றி இழுத்தடித்தல் என்பதையே தனது நிலைப்பாடாக அரசாங்கம் கொள்ளுமாயின் சமாதான முயற்சிகளே கேள்விக்குள்ளாகிவிடக்கூடும்.

ஏனெனில் கடந்த காலத்தில் நிலவியதுபோன்றதொரு அரசியல் சூழ்நிலையில் இடைக்கால நிர்வாக சபை குறித்த பேச்சுக்கள் இடம்பெறவில்லை. கடந்த காலத்தைப்போன்று தமிழ் மக்களையும், அவர்களுக்குத் தலைமைதாங்கும் விடுதலைப்புலிகளையும் ஏமாற்றுதல் என்பது இலகுவானதோ, சாத்தியமானதொரு நடவடிக்கைக்களாகவோ இருக்கமாட்டது. அது மட்டுமல்ல, சமாதான முயற்சிகள் நீடிக்கப்படவேண்டும் என்பதும், விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்று வழங்கப்படுதல் வேண்டும் என்பதும் சர்வதேசத்தின் அபிப்பிராயமாகவுள்ளது.

ஆகையினால் கடந்த கால வரலாற்று அனுபவத்தின் அடிப்படையில் ஐ.தே.முன்னணி அரசாங்கமோ சரி வேறு எந்த அரசாங்கமோ இனிமேலும் தமிழ் மக்களையும் அதன் தலைமையையும் ஏமாற்றமுற்படலாம் எனக் கருதுவது தவற்றானதாகவே இருக்கும். அவ்வாறு ஏமாற்ற முயன்றால் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படாமல் பறித்தெடுப்பதற்கான சூழ்நிலையே உருவாகக்கூடும்.

சரி, இதற்கு மாறாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ச கூறுவதுபோன்று ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் எனக் கூறுவது பகற்கனவு என வைத்துக்கொண்டால் இதற்கு எதிராக-அதாவது இடைக்கால நிர்வாக சபை உருவாக்கப்படுவதற்கு எதிராக ஏன் பொ.ஐ.முன்னணி கூச்சல் போடவேண்டும்? எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ச தலைமையில் திசமாறகமவில் இருந்து கதிர்காமத்திற்கு ஏன் பாதயாத்திரை போகவேண்டும்? எதிர்க்கட்சியினருக்கு வேலை எதுவும் இல்லை என்பதினாலா? அன்றிப் பொழுது போக்கில்லை என்பதினாலா?

# ஜே.வி.பி. உருவாக்கியுள்ள தேச பிரேமி தீவிர இனவாதமுடைய அமைப்பாகும்

## -ஊடகவியலாளர் அனந்த தேசப்பிரிய

(கொழும்பு)

தற்போது ஜே.வி.பி.யினரால் அமைக்கப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படும் தேசாபிமான இயக்கமானது 1983 ஆம் ஆண்டில் தமிழர்களுக்கெதிராக எல்லே குணவன்ச தேரவினால் கொண்டுவரப்பட்ட ஒன்றே எனவும் அதனால் அன்று அமைக்கப்பட்ட இவ்வமைப்புக்கு மேல் தற்போது ஜே.வி.பி. அமைத்திருக்கும் தேசபிரேமி இயக்கமானது தீவிர இனவாதத்தை கொண்டது என ஊடகவியலாளரான சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எந்தப் பெயரைக் கொண்டு ஜே.வி.பி. இயக்க அமைப்புக்களை உருவாக்கினாலும் அவர்களின் அரசியல் சிந்தனை ஒரேமாதிரியானவையே எனவும் அவர் தெரிவிக்கிறார்.

தீவிரப்போக்கிலிருந்து அரசியல் நீரோட்டத்திற்கு வந்திருப்பினும் அவர்களின் போக்கு தீவிர பயங்கரவாதமே. அவர்களின் பயங்கரவாதத்திற்கு தென்பகுதி மக்கள் ஒத்துப் போகமாட்டார்கள் யுத்தத்தை விரும்புவோர் 20 வீதத்தினர் மட்டுமே. திலக் கருணாரத்தின, ராஜரத்ன போன்றோருக்கு அரசியலில் வாய்ப்பு கிட்டாமல் போனமை இதற்கு எடுத்துக்காட்டாகும் இவ்வாறு ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய கூறியிருக்கின்றார்.

# தமிழக முதல்வரைச் சந்தித்துப்பேசும் மிலிந்தவின் முயற்சி கை கூடவில்லை

## -ஐந்தாவது தடவையாகவும் மறுப்பு

(கொழும்பு)

அமைச்சர் மிலிந்த மொறகொட தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை சந்திப்பதற்கு எடுத்த முயற்சி கைகூடவில்லை என்று தெரியவருகின்றது.

அவர் அமெரிக்கா சென்றுவிட்டு நாடு திரும்பும் வழியில் தமிழ்நாடு முதலமைச்சரைச் சந்திப்பதற்கான முயற்சிகளை இருதினங்களுக்கு முன்னர் மேற்கொண்டிருந்தார்.

ஏற்கனவே இவ்வாறு தமிழக முதலமைச்சரைச் சந்திப்பதற்கு நான்கு முறை முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இது அவர் மேற்கொண்ட ஐந்தாவது முயற்சி என்று தெரியவருகின்றது. முதலமைச்சரின் அதிகாரிகள் அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்திக்க நேரம் ஒதுக்கிக் கொடுக்க மறுத்து விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தியாவிலுள்ள இலங்கை தமிழ் அகதிகள் விவகாரம் மற்றும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைப்பது ஆகிய விடயங்கள் தொடர்பாகவே தமிழக முதல்வருடன் அமைச்சர் மிலிந்த மொறகொட பேச்சு நடத்த முயற்சி செய்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்விரு விடயங்கள் குறித்தும் முதலமைச்சர் ஜெயலலிதா கடும் போக்கை கடைப்பிடித்து வருவதாகவும் தெரியவருகின்றது.

# படகுகளில் தாயகம் திரும்பக் காத்திருந்த பதினொரு இலங்கைத் தமிழர்கள் கைது!

இராமேஸ்வரத்திலிருந்து களவாகப் படகுகள் மூலம் இலங்கைக்குச் செல்லவிருந்த 11 இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

நெல்லை, வேலம், தர்மபுரி மாவட்டங்களில் தங்கியிருந்த இவர்கள் 11பேரும் இராமேஸ்வரத்திலுள்ள ஒரு விடுதியில் பதுங்கியிருந்த வேளை, ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறையினர் இவர்களை கைது செய்துள்ளார்கள்.

கைது செய்த பொலிசார் அவர்களை அவர்கள் தங்கியிருந்த முகாம்களுக்கு திருப்பி அனுப்பியுள்ளார்கள்.கைது செய்யப்பட்டு திருப்பியனுப்பப்பட்ட 11 பேரில் 06 பேர் பெண்களாவார்கள்

# தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சனாதிபதியின் மனநிலை புலப்படுகிறது

## -நவசமசமாச கட்சிச் செயலர் கருத்து

(கொழும்பு)

அதிகாரப் பரவலாக்கலில் தமது உடன்பாட்டை வெளிப்படுத்தும் சந்திரிகா, அதே நேரம் அதற்கு எதிரான பாதயாத்திரையில் தமது கட்சியினரை பங்கு கொள்ள அனுமதித்துள்ளமையானது தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான அவரின் மனநிலையை வெளிப்படுத்துவதற்தாக உள்ளது என நவசமசமாசக் கட்சியின் செயலர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறும் போது. ஐ.தே கட்சி முன்னைய காலங்களில் பிரச்சினைகளின் போது அதன் தலைவர்கள் தவறான அணுகுமுறையை கையாண்டு பின்னர் திருந்தி உள்ள நிலையில் சில இடது சாரிகள் இனப் பூசலுக்கு தூபமிடுகின்றன இது வரலாற்றில் ஏற்படும் விபத்தாகும்.

இனப் பிரச்சினைக்கு சாதகமான தீர்வொன்றைக்காண செல்வா-பண்டா ஒப்பந்தம் கைச்சாத்தான போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார் ஜே.ஆர் ஜெயவர்தனா. அந்தத் தவறை உணர்ந்து திருந்திய நிலையில் ஐ.தே.க தற்போது இனப்பிரச்சினை தீர்வுக்கு இறங்கியிருக்கிறது. இது களியாட்டம் ஒன்றைவிட முக்கியமானது. ஆகவே இதற்கு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழீழ விளையாட்டுத்துறை அனுசரணையில் சிறுவர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சி

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் ஆசிய ஜேர்மன் விளையாட்டுப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சி எதிர்வரும் அக்டோபர் 2ம்.3ம் திகதிகளில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிளி/மகாவித்தியாலயம், வட்டக்கச்சி ம.வி, உருத்திரபுரம் ம.வி, முழங்காவில் ம.வி, பளை மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளின் சிறுவர்களுக்கான பயிற்சியாக இப் பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

இவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கென, மூன்று ஜேர்மனிய பயிற்றுனர்களும் ஓர் இத்தாலியப் பயிற்றுனரும் கிளிநொச்சிக்கு வருகைதரவுள்ளனர். இவர்களில் இருவர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பயிற்சி நிகழ்வுகள் வைபவரீதியாக காலை 8.00 மணிக்கு ஆரம்பிக்கப்படுமென பயிற்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (சோ)

## பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியை வெளியேற்றுமாறு வற்புறுத்தி நேற்று

# முத்துத்தம்பி வி. மாணவர் போராட்டம்

நமது பாடசாலைக்கட்டடத்தில் இயங்கிவரும் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியை அங்கிருந்து வெளியேற்றக்கோரி திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்புப் போராட்டமொன்றை மேற்கொண்டுள்ளனர்.

தமது பாடசாலைக்கட்டடங்களில் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதால், தாம் போதிய அடிப்படை வசதிகள் ஏதுமின்றி கல்வி கற்றவேண்டியிருப்பதாகக் குற்றஞ்சாட்டுகின்ற மாணவர்கள், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை வேறு பொருத்தமான இடத்துக்கு இடமாற்றம் செய்யுமாறும் கோரியுள்ளனர்.

இம் மறியல்போராட்டத்தினால் 300க்கும் மேற்பட்ட ஆசிரிய மாணவர்கள் வீதியில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இடப்பெயர்வு காரணமாக கடந்த 12வருடங்களாக யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் இயங்கி வந்த பலாலி ஆசிரிய கலாசாலை நேற்று இயங்க இடமின்றி வீதியில் நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இக்கலாசாலை மருதனா மடத்துக்கு இடம் நகர்த்தப்படஇருந்தது. ஆனால் அங்கும் இதற்கான இடம் மறுக்கப்பட்டதன் காரணமாகவும் பாடசாலைச் சமூகத்தினரின் பகிஸ்கரிப்பு நடவடிக்கைகளினாலும் பலாலி ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர்கள் செல்ல இடமின்றி தெருவோரங்களில் நின்றனர். இந்த நிலை நாளையும் தொடரலாம் என இவ்வட்டாரங்கள் கவலை அடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

1990ஆண்டு வலிகாமம் வடக்கின் பலாலி படைத்தளத்தை அண்டிய பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளையடுத்து மேற்படி ஆசிரிய பயிற்சி கலாசாலை இடப்பெயர்விற்கு உள்ளாகியது.

பின்னர் குறித்த பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு வலையங்கள் என பிரகடனப்படுத்தப்பட்டதை யடுத்து இடம்பெயர்ந்திருந்த ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை யாழ் நகரையண்டிய திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்க ஆரம்பித்திருந்தது.

எனினும் அதியுயர் பாதுகாப்பு வலய காரணங்களைக்காட்டி சொந்த இடத்திற்கு பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை செல்லமுடியாத நிலை தொடர்ந்து நீடிக்கின்றது.

இந்நிலையிலேயே பயிற்சிக் கலாசாலை இயங்கிவரும் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய மாணவர்கள் நேற்றைய தினம் வகுப்பிற்கு செல்லாது பாடசாலைக்கு வெளியே பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். (27.ஜெ)

## உலக தரிசன நிறுவனத்தின் கிளி செயலகம் திறப்பு



(அலுவலக செய்தியாளர்)

உலக தரிசன நிறுவன (வேல்ட்விசன்) கிளி.மாவட்டச் செயலகத்திறப்பு விழா நிகழ்வு நேற்று நடைபெற்றது.

நேற்று பகல் 10.30 மணிக்கு கிளி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு மேற்படி நிறுவனத்தினை சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

உலகதரிசன நிறுவன இலங்கைக்கான பணிப்பாளர் யூவாலி,தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்ட இணைப்பாளர் லோரன்ஸ் கிருஸ்டி, அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் பொன். விநாயகமூர்த்தி, கிளி-முல்லை குருமுதல்வர் தேவசகாயம் அடிகள், கிளி. வலயக்கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம், கண்டாவளை, பளை பிரதேசச் செயலர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனப்பிரதி நிதிகள் ஆகியோர் நிகழ்வில் கலந்து சிறப்பித் தனர். (வேல்ட்விசன்) உலக தரிசன நிறுவனமானது கிளிநொச்சி மாவட்டத்தில் குறுகிய மற்றும் தூரநோக்க புனர்வாழ்வு பணிகளை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## மாணவர்களிடையே மோதல்

கொழும்பு சட்டக்கல்லூரியில் இரண்டு மாணவக் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் 20 மாணவர்கள் காயமடைந்த நிலையில் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜே.வி.பி. ஆதரவாளர்களாக இருக்கும் அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்களும் ஏனைய மாணவர்களை ஆயுதங்கள் கொண்டுத் தாக்கியுள்ளார்கள். இதன்போது மூண்ட சண்டையிலேயே மேற்படி 20 மாணவர்களும் காயமடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. இக்கலவரத்தை அடக்க பொலிசார் அவ்விடத்துக்குச் சென்றுள்ளனர்.

இதற்கிடையில் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகப் பீடாதிபதியை இடம் மாற்ற வேண்டுமென கொடுக்கப்பட்ட மனுவை சனாதிபதி நேற்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினருடன் ஆய்வு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது. (32)

## ஜே.வி.பி. –சுதந்திரக் கட்சி கூட்டுக் குறித்து பேச்சுக்கள்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும் உத்தியோகப் பற்றற்ற விதத்தில் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளது.

இதற்கிடையில் பொதுசன ஐக்கிய முன்னணியின் 10 பின் வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுரா பண்டாரநாயக்கவையும், விமல் வீரவன்சவையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இதன்போது அதிகாரப் பகிர்வு என்ற விடயத்தை ஜே.வி.பி. ஓரளவு விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டால் தங்களால் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முடியும் என்று சுதந்திரக் கட்சியினர் அறிவித்துள்ள அதே சமயம், அனைத்து மக்களும் சமமான உரிமைகளைக் கொண்டிருப்பதால் யாருக்கும் அதிகமான உரிமைகளைக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. இதனால் அதிகாரப் பரவலாக்கம் என்ற விடயத்தைக் கைவிட்டு தமது இடது சாரிக் கொள்கையின் கீழ் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று அறிவித்துள்ளனர். (32)

## நாட்டுப்பற்றாளர் முன்னணியின் கூட்டம் இன்று நடைபெறும்

(கொழும்பு)

வடக்கு -கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்று வழங்கப்படுவதை எதிர்த்து நாட்டுப்பற்றுள்ளோர் தேசிய அமைப்பு ஏற்பாடு செய்துள்ள பாதயாத்திரை நேற்று நான்காவது நாளாகத் தொடர்கின்றது. இப் பேரணி நேற்று வரை கடவத்த என்ற இடம் வரையும் வந்தடைந்துள்ளது.

இன்று இப்பேரணி கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தை வந்தடைந்ததும் மாலை 4மணியளவில் பொதுக்கூட்டமொன்று இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இதற்கென ஜே.வி.பியினரும் பொதுசன ஐக்கிய முன்னணியினரும் விசேட போக்குவரத்து ஒழுங்குகளை செய்துள்ளதாகத் தெரியவருகிறது. கடந்த ஐந்து நாட்களாக இடம் பெற்று வந்த இப்பேரணி இன்று மாலை நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்துடன் முடிவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## முல்லை..

வாகனத்தின் முன்பகுதி பெரும் சேதமடைந்தது. எனினும், வாகனத்தில் பயணித்தவர்கள் எதுவித காயங்களும் இன்றி தப்பியுள்ளனர்.

அண்மை நாட்களாக வன்னியின் ஏ.9 வீதி மற்றும் பரந்தன் - முல்லை வீதி ஆகிய இரண்டு வீதிகளிலும் தொடர்ச்சியாக வீதி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றது. இதனால், மக்கள் பதற்றத்துடன் வீதியில் நடமாடி வருவதைக் காண முடிகிறது.

நேற்று நடைபெற்ற விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (லோ)

## நெருப்பாற்று நீச்சலில் பத்தாண்டுகள் நூல் இன்று யாழ். இலும் வெளியீடு

தமிழீழ விடுதலைப்புலிகளின் படையணிகளில் ஒன்றான சாள்ஸ் அன்ரனி சிறப்புறப் படையணியின் "நெருப்பாற்று நீச்சலில் பத்தாண்டுகள்" எனும் நூல் இன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் வெளியிட்டுவைக்கப்படவுள்ளது.

சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் பத்தாம் ஆண்டு நிறைவு தின பூர்த்தி விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்டு வைக்கப்படும் இந்நூலில் கலைநிகழ்வுகள், போராளிகளது வாழ்வு அனுபவங்கள் உள்ளிட்ட உண்மைப்பதிவுகள் என்பவற்றுடன், இது வரை இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது உயிர் துறந்த இப்படையணியைச் சேர்ந்த போராளிகளது பெயர் விபரங்களும் வெளியாகின்றது.

பிற்பகல் 4.00 மணிக்கு இடம் பெறவுள்ள நூல் வெளியீட்டு விழாவிற்கு தளபதி அமுதாப் தலைமை தாங்குகின்றார்.

நூலுக்கான மதிப்பீட்டுரையை கவிஞர் புதுவைஇரத்தினதுரை மற்றும் பேராசிரியர் செ. கிருஷ்ணராசா ஆகியோர் வழங்க சிறப்புரையை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியும் வெளியீட்டுரையை கலைக்கோண் அவர்களும் ஆற்றுகின்றனர்தெரிந்ததே (27).

## பொங்குதமிழ் செயற்குழு மன்னாரில் அமைப்பு

(மன்னார்)

மன்னாரில் அடுத்த மாதம் 15ஆம் திகதி "பொங்குதமிழ்" எழுச்சி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பொங்குதமிழ் செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மன்னாரில் பொங்குதமிழ் செயலகம் ஒன்று அமைக்கப்பட்டு பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## அமைச்சர் கண்ணப்பன் வாஜ்பாயுடன் சந்திப்பு

(புதுடில்லி)

தமிழக அரசு 'பொடோ' சட்டத்தின் கீழ் கைது செய்யத் தீர்மானித்துள்ள ம.தி.மு.கழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் கண்ணப்பன் நேற்று பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துள்ளார்.

கண்ணப்பன் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசி வருவதால் அவரை பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்ய தமிழக அரசு முடிவெடுத்துள்ளதாகவும் இதை இலகுபடுத்த மத்திய அமைச்சர் பதவியிலிருந்து கண்ணப்பனை விலத்தி விடுமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமர் வாஜ்பாயிற்கு கடிதம் எழுதியுள்ளது தெரிந்ததே.

நேற்று வாஜ்பாயைச் சந்தித்த கண்ணப்பன் விடுதலைப்புலிகள் தொடர்பாக தாம் பேசியது குறித்து விளக்கமளித்துள்ளார்.

இந்நிலையில், மத்திய சட்ட அமைச்சின் கருத்தைப் பிரதமர் வாஜ்பாய் கோரியுள்ளார்.

## ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து புகையிரத ஊழியர் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து புகையிரத திணைக்கள ஊழியர் சங்கங்கள் நள்ளிரவு 1200 மணி முதல் 48 மணி நேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளன.

புகையிரதத் திணைக்களம் அதிகார சபையுடன் இணையும் நாள் முதல் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும். அதிகார சபையுடன் இணையாத ஊழியர்களுக்கு போதியளவு நட்டஈடு வழங்க வேண்டும் 8 வருடங்கள் கடமையாற்றிய ஊழியர்கள் 10 வருடங்கள் கடமையாற்றியதாகக் கருதி நட்டஈடு வழங்க வேண்டும். அதிகார சபையில் இணையும் ஊழியர்களுக்கு 75 சதவீத சம்பள உயர்வு கிடைக்க வேண்டும். புகையிரதத் திணைக்கள சட்டத்தின் மூலத்தில் 35-ஏ சரத்து நீக்கப்பட வேண்டும். போன்ற கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டுள்ளன.

35-ஏ சரத்தில் அதிகார சபையை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்குத் தொடர முடியாது என்று கூறப்பட்டுள்ளது.

## இல...

கீம் முஸ்லிம்கள் ஒருமித்த கருத்துடன் எதிர்வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தனியான தரப்பாகப் பங்குகொள்ள வழிவகைகள் செய்து தரப்பட வேண்டுமெனவும், இதற்கு சர்வதேச சமூகம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாகத் தாம் பாராளுமன்றத்தில் விவாதத்தில் ஈடுபடப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் லக்ஸ்மன் கதிர்காமரைச் சந்தித்த லங்ஸ்ரீட் இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் அது நிச்சயப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும் என்றும், சமாதான நடைமுறை நிச்சயப்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்தாலே இலங்கைத் தீவில் சமாதானம் ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார். இது இவ்வாறிருக்க யாழ்ப்பாண நூலகத்திற்கென ஒரு தொகுதிப் புத்தகங்களையும் லக்ஸ்மன் கதிர்காமரிடம் லங்ஸ்ரீட் வழங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது. (32)

## சந்திப்பில்...

பிரதிநிதிகள் நேற்றுப் பிற்பகல் சந்தித்து தம்மிடையே ஆராய்ந்துள்ளனர். குறிப்பாக இறங்குதுறைகள் அமைந்துள்ள பருத்தித்துறை பிரதேசத்தின் பிரதேச செயலர் இறங்கு துறைகளை ஆழப்படுத்துவதற்கான அனுமதியைக்கோரி இப்பகுதிகளில் நிலை கொண்டுள்ள 53-4 படைப் பிரிவின் கட்டளை அதிகாரிக்கு அண்மையில் அனுப்பி வைத்திருந்த கடிதம் தொடர்பாகவும், இச்சந்திப்பில் ஆராய்ந்ததாக மீனவ சங்கப் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் முடிவிலேயே போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் மற்றும்இராணுவ கடற்படை அதிகாரிகள் கலந்து கொள்ளும் இன்றைய கூட்டத்தில் உரிய தீர்வு எட்டப்படாவிடின் வெளிநடப்பு செய்வதென மீனவ சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

இன்று பருத்தித்துறை துறை முகத்தையண்டிய அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 53-4 படைத் தளத்தில் சந்திப்பிற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.